## <u>சுருக்கம்</u>

சிறைத்துறை – சிறைத்துறையில் இரண்டாம் நிலைக் காவலர்களாக நியமனம் செய்யப்படவுள்ள 210 சிறைக்காவலர்களுக்கு 6 மாத கால அடிப்படை பயிற்சி காலத்தில், உடற்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் சிலம்பக் கலை பயிற்சியை ஒரு பகுதியாகச் சேர்த்து 50 வகுப்புகள் நடத்த அனுமதி வழங்கி – ஆணையிடப்படுகிறது.

---

**<u>உள் (சிறை.2) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.296** **நாள்: 01.09.2020.**

**(சார்வரி, ஆவணி –16, திருவள்ளுவர் ஆண்டு – 2051)**

**படிக்கப்பட்டது:**

காவல்துறை தலைமை இயக்குநர்/சிறைத்துறைத் தலைவரின் கடித எண்.31767/இடபிள்யூ.2/2019, நாள் 02.03.2020.

*******

**<u>ஆணை:–</u>**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் காவல்துறை தலைமை இயக்குநர்/ சிறைத்துறைத் தலைவர் தெரிவித்துள்ள காரணங்களின் அடிப்படையில் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறைத்துறையில் இரண்டாம் நிலைக் காவலர்களாக நியமனம் செய்யப்படவுள்ள 210 சிறைக்காவலர்களுக்கு (188 ஆண் மற்றும் 22 பெண்) திருச்சி, மத்திய சிறை வளாகத்தில் உள்ள தற்காலிக சிறைக்காவலர் பயிற்சிப்பள்ளியில் அளிக்கப்படவுள்ள 6 மாத கால அடிப்படை பயிற்சி காலத்தில், உடற்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் சிலம்ப கலை பயிற்சியை ஒரு பகுதியாகச் சேர்த்து 50 வகுப்புகள் நடத்த அனுமதி அளித்தும், அதற்குண்டான செலவினத் தொகை ரூ.90,000/– (ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்)–ஐ இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பு பயிற்சி (Commando Training) அளிப்பதற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

2. மேற்கண்ட செலவினத்தை கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைத்திடல் வேண்டும் :–

“2056-00-Jails-001 Direction and administration – State’s Expenditure – AA – Inspector General of Prisons-372 Training” – 01 Training
IFHRMS (DPC – 2056-00-001-AA-37201)
Old DPC (2056-00-001-AA-7216)

3. மேலே பத்தி–1 ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்த்திருத்த பணிகள் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.26736/நிதி(உள்–II)/2020, நாள் 24.08.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எஸ்.கே.பிரபாகர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
காவல்துறை இயக்குநர்/தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்த்திருத்த பணிகள் துறை, சென்னை – 8.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பளம் மற்றும் கணக்காய்வுத் தலைவர், சென்னை–15.
**நகல்:**
நிதி (உள்–II)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

5.9.20
**பிரிவு அலுவலர்**
5/9/20